Registered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு மாசி மீ உ௦ உ (1947 மார்ச் 4 செவ்வாய்க்கிழமை) [இல கூ௦

## தமிழன் படும்பாடு

(பண்டிதர் சு. நவநீதக்கிருஷ்ண பாரதியார்)

[ அளவெட்டி தமிழ்க்கலை மன்றத்தை ஆரம்பித்து வைக்கையில் பண்டிதர் சு. நவநீதக்கிருஷ்ண பாரதியார் செய்த பிரசாரணச் சாரம் ]

முற்றொடர்

சொற்பிணைப்பின் பொருத்தத்தால் பொருட்டெளிவு காட்டலும் தமிழ் மரபறிந்த புலவர் செயலாம். இதற்குத் தமிழ் நூல்களில் இங்கும் அங்குமாசப் பல மேற்கோள்கள் காணலாம். இன்னோன்ன நுட்பங்கள் தேராதார் தமிழ்ப் புலவர்களுக்கு நல்வழி காட்ட முன்வருவது நகைப்பாக விருக்கிறது. வள்ளுவர் தந்த அருமைக் குறள் ஒன்றில்,

"நீங்கிற் றெறூஉங் குறுகுங் காற்
றண் ணென்றுந்
தீயாண்டுப் பெற்றாளிவள்."

என்கிறார்.

உலகத்திலுள்ள நெருப்பெல்லாம் சேர்ந்தாரைச் சுடுபவனறி நீங்கினாரைச் சுடமாட்டா. ஆனால் யான் மருவிய பெண்ணமிழ் தலையாள் தந்த காமத்தீயோ அவளைவிட்டு நீங்குங்கால் சுடுவதாயிருக்கின்றது. அடையுங்கால் குளிர்வதாயிருக்கின்றது. இத்தகையதொரு புதுமையான தீயை இவள் எங்குப் பெற்றாளோ அறிகின்றிலேன் என்று கூறுகிறார். இலகுவான நடையிற் செய்யுள் செய்ய வேண்டுமென்னும் கொள்கையுடையார் இச்செய்யுளில் உள்ள சொற்களில் தெறூஉம், தண்ணென்னும் யாண்டு என்னும் கடினமான சொற்களைக் காணக் கூடும். இச்சொற்களை நீக்கிவிட்டு

"நீங்கிற் சுடூஉம் குறுகுங்காற்
றுன்குளிரும்
தீயெங்குப் பெற்றாளிவள்,"

என அமைத்தால் செய்யுளின் உயிரேபோய் விட்டதல்லவா? தெறூஉம் தண்ணென்னும் சொற்கள் வெப்பத்தையும் தட்பத்தையும் நேரே காட்டுதல் உணர்ச்சியுள்ளம் படைத்தார் யாவர்க்கும் புலனும். சொல்லும் ஆற்றலினால் "தெறூஉம் என்னுஞ் சொல் சுடுவது போலவும் 'தண்' என்னுஞ் சொல் குளிர்வது போலவும் ஒலித்தலைச் செவி கருவியாக உணர்ந்து கொள்க, விரிப்பிற் பெருகும்.

தமிழறிஞர்களும் ஆங்கில மொழியுணர்ந்தவர்களும் தம்மிற் பகைத்து ஒருவரையொருவர் ஒதுக்கி வாழாது ஒன்றுபட்டு உழைப்பின் தமிழ்மொழி ஆக்கம் பெருகும்; ஆனால் ஆங்கிலம் படித்த அறிஞர்கள் தமிழ் மொழியைத் தாம் கற்றுக்கோடலின்றித் தமிழ் மொழிக்கும், தமிழ்ப் புலவோர்க்கும் குறைகள் கூறவும், ஆங்கில மொழி உயர்ந்தது எனவும் ஆங்கிலப் புலவர்களுக்கு ஈடான புலவர்கள் பிறந்திலரெனவும் ஆங்கிலத்துக்கு ஏற்றஞ் சொல்லவும் முற்படுவாராயின் அவரால் அழிவேயன்றி ஆக்கம் எதுவும் எய்தாதென விடுக்க. தமிழ் எமது தாய்மொழி என்பதற்காக நாம் தமிழில் அன்புகொள்ளவேண்டும். சிலர் தமிழ் சிறந்த பாஷை. அதில் எண்ணிறந்த புலவர்கள் பாடியிருக்கிறார்கள். காலங் கடந்ததும் இலக்கண வரம்பு பெற்றதுந் தமிழ் ஆதலால் நாம் தமிழில் அன்புவைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். யான் அவ்விதங் கூறவரவில்லை. ஒருவன் தன்னுடைய மனைவிக்கு ஐம்பதினாயிரம் சீதனம். நல்ல கட்டழகி ஆதலால் தான் அவளைக் காதலிக்கிறதாகக் கூறினால் அவனுடைய காதலைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அது பூரணமானதும் அமரத்துவம் பெற்றதுமாய காதலாகுமா? இல்லை. ஒருபோதும் இல்லை. இவ்வாறன்றி "என்னுடைய மனைவி கன்னங்கரேலெனக் கறுத்து அழகற்றவளாயும் ஒருபணந்தானும் சீதனமற்றவளாயும் இருக்கிறாள். அவளுடைய பற்கள் முன் நீண்டு வளைந்து வக்கிரத் தந்தங்கள் போலிருக்கின்றன, ஆனால் அவள் எனது மனைவியாக இருத்தலின் நான் அவளை என் உயிர்த்துணைவியாக எண்ணிக் காதலிக்கிறேன். என்று அவன் கூறுவானாயின் அவனுடைய காதலே மேலானது தெய்வத்தன்மை பொருந்தியது என நான் மதிக்கிறேன். அஃதேபோல நாமும் எமது தமிழை அதற்கும் எமக்கும் உரிய உரிமைபற்றிக் கனம்பண்ண வேண்டும். எமது தாய் மொழியல்லவா அது?

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—யின்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று கூறுகிற பாரதியாரின் அன்பைத்தான் அனைவருந் தமிழ்த்தாயிடம் வைக்கவேண்டுமென வேண்டுகிறேன்.

ஆங்கிலங் கற்கப்புகுந்த தமிழ்மக்கள் ஆங்கிலத்தைக் கற்கலாமேயன்றி ஆங்கிலேயராகி விடக்கூடாது. ஆட்டிறைச்சி தின்ன விரும்பிய எவராவது ஆடாக மாற்றுருவமைய விரும்புவரோ? தமிழ் மக்கள் நடையுடை பாவனைகளிலெல்லாம் தமது தமிழ்ப் பண்பைக் கைநெகிழவிடலாகாது தமிழனுடைய நடை யுடை பாவனைகளைப் பின்பற்றும்போது தான் குறைந்தவனுவதாக எவன் கருதுகிறானோ அவ்வாறு கருதி எவன் தனது நடையுடை பாவனைகளை மாற்றுகிறானோ அவன் உண்மைத்தமிழனாகான். எங்கள் நடையுடை பாவனைகளெல்லாம் நேரத்திற்கு நேரம் மாற்றிப் போடுந் தொப்பிகளாகா. சரித்திர ஆராய்ச்சிக் கெட்டாத காலந்தொட்டுத் தமிழ்ப் பண்பாடு குலையாது வாழ்ந்த நாம் இன்னும் நீடூழி எம் சந்ததியாரை நிலை நிறுத்த வேண்டுமாயின் நாம் இன்று நிலையிற் பிரிதல் ஆகாது.

தமிழ்க் கலைகளாக இன்று உள்ளவை இலக்கிய இலக்கணங்களாகவே பெரும்பாலுங் காணப்படுகின்றன. ஆனால் பண்டோ வைத்தியம், சிற்பம், நடனம், நாட்டியம், விஞ்ஞா

## நிரபராதி

### சமாதான நீதிபதிமீது வழக்கு

வண்ணார்பண்ணை கிழக்கு, சமாதான நீதிபதியான டக்ரர் ஈ.மீ. கனகசபை, கடற்கரைத் தெருவிலுள்ள டக்ரர் எஸ். சுப்பிரமணியம் அவர்களுக்குச் சொந்தமான சில மருந்து வகைகளைச் சட்டவிரோதமாகப் பெற்றுத் தம்மிடம் வைத்திருந்தனர் என்று யாழ்ப்பாணம் பொலிசார் ஓர் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்குச் சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் ஓ. எல். டீ. கிறெற்ஸர் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதி எதிரியை நிரபராதியெனக்கண்டு அவரை விடுதலை செய்தார். அவர் தமது தீர்ப்பில் இந்த வழக்கைத் தொடர்ந்த பொலிஸ் பகுதியினரைக் கண்டித்துப் பின்வருமாறு கூறினர்:

"இந்த வழக்கைத் தொடருமுன், இதன் சகல அம்சங்களையும் சீர்தூக்கி, இவ்விஷயத்தை முறைப்படி விசாரித்திருந்தால் இந்த வழக்குத் தொடரவே இடமிருந்திருக்காது.

"நடராசாவுக்கும் துரைரத்தினத்துக்கும் விற்கப்பட்ட பொருள்கள் டக்ரர் சுப்பிரமணியம் வீட்டிற் களவாடப்பட்ட பொருள்கள்தான் என்பதை நிரூபிக்கப் பொலிஸ்பகுதியினர் தவறிவிட்டனர்."

பொலிஸ் பரிசோதகர் ஜெட்றிக்கோ (இவர்தான இவ்வழக்கு விஷயமான விசாரணை புரிந்தவர்)வின் சாட்சியத்தைப்பற்றி நீதிபதி பின் வருமாறு குறிப்பிட்டார்:

"இந்தப் பரிசோதகர் ஆங்கிலத்தில் பேசுகையில், தம் கருத்து மற்றவர்களுக்குப் புரியத்தக்க விதமாகச் சொல்லும் ஆற்றலற்றவர் என்றே பட்டது. இவர் தம் விசாரணையில் மிகவும் சாவதானமின்மையாய் விஷயம் ஆற்றியிருக்கிறார்.

'ஜெட்றிகஸ் என்னும் ஒருவரை பம்பாயிலிருந்து சாட்சியத்துக்கு அரசாங்கச் செலவில் இங்கு அழைப்பித்தார்கள். இப்படிப் பெரும் பணச் செலவில் அழைக்கப்பட்ட அவர் இது சம்பந்தமான புத்தகங்களைக் கொண்டு வரும்படி சொல்லப்படவில்லை. இதைப்போலப்பராமுகமான செயல் பிறிதென்ன இருக்கிறது?"

## இலங்கைத் துவஜம்

### பொதுவானது எது?

இலங்கைக்குப் பொதுவான, எல்லா மக்களும் கௌரவிக்கக்கூடிய தேசியக் கொடி ஒன்றும் இல்லை. சேனநாயக்கா கோத்தலாவலைக் கோஷ்டியினர் சிங்கத்தின் உருவம் பொறிக்கப்பெற்ற ஓர் கொடியினைப் பொது அரசாங்க நிலையங்களில் ஆரோகணித்திருந்தனர், இது அவர்களின் சர்வாதிகாரச்செயலேயன்றி, அப்படிச் செய்ய உத்தியோகபூர்வமாக இலங்கையரசாங்கத்தால் அநுமதிக்கப்படவில்லை. ஆனால் டெல்கியில் நடக்கவிருக்கும் ஆசியா உறவு மகாநாட்டில் எல்லா ஆசியா நாடுகளுடைய கொடிகளையும் பறக்கவிட உத்தேசித்திருப்பதால் இலங்கையின் தேசியக் கொடி ஒன்றையும் அனுப்பி வைக்கும்படி, அம்மகாநாட்டு அதிகாரிகள் இலங்கையைக் கேட்டிருக்கிறார்கள்.

எல்லா வகுப்பினராலும் தேசியக் கொடியென ஒப்புக்கொள்ளப்பட்ட கொடியொன்று இதுவரைஏற்படாதபடியால் இந்த விஷயம் இப்போது சிக்கலை விளைத்திருக்கிறது. எந்தவிதமான கொடியைத் தயாரிக்கலாம் என்று மந்திரசபையினர் இப்போது ஆலோசித்து வருகின்றனர்.

## மாயாஜால மேதாவி!

### சேர். ஒலிவரின் மந்திரஜாலம்

கொழும்பிற் பிரசுரமாகும் "சேர்ச் லைற்" என்னும் வாரப்பத்திரிகையின் வருமாறு எழுதுகிறது:

இலங்கையின் பணநிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வருகிறது. சேர். ஒலிவர் குணத்திலக்கா என்ற எங்கள் நிதிக் காரியதரிசியோ மந்திரத்தால் மாங்காய் விழுத்துவார் போல ஜாலங்கள் செய்கிறார். இலங்கைக்கு 30 கோடிரூபா நட்டம் வரப் போகிறது என்று ஓர்கணம் சொல்லி எங்களை மூச்சுத் திணற வைக்கிறார்: ஆனால் அடுத்த விநாடி, ஓர் பெரும் செலவினத்துக்கு ஆசீர்வாதம் கொடுக்கிறார்.

மந்திரவாதிகள் பலபல வேலைகள் செய்வர் என்று சொல்லுகிறார்கள். வெறுந்தரையில் இருந்து மாங்கன்று முளைக்கப்பண்ணி, அதனைக் காய்க்கச் செய்து, பழுக்கச்செய்து, கனியும் தருவார்கள்; சிலசமயங்களில் அவர்களே திடீரென மறைந்தும்விடுவார்கள். இப்படிப்பட்ட இந்தமாயாஜால வித்தைகளில் தாம் கைதேர்ந்தவர் என்பதை சேர். ஒலிவர் குணத்திலகா எங்களுக்குக் காட்டி வருகிறார். பணம் வரும்; பின் அது கோடிக் கணக்கில் மறையும். ஊர்ப் பாதுகாப்புப் பகுதியில் எத்தனை கோடி ரூபா மறைந்தன! நூற்றுக்கணக்கானமாடுகள் மறைந்தன. இந்த மாயாஜாலங்களைக் கண்டுபிடிக்க ஓர் கணக்குப்பரிசோதனை அதிகாரி புறப்பட்டார். உடனே அவரும் அரசாங்க சேவையிலிருந்து மறைந்தார்! ஓர் புதியகணக்குப் பரிசோதனை அதிகாரி வந்தார். அவர் 697 ஆட்சேபனைகளைக் கிளப்பினார். உடனே ஊர்ப் பாதுகாப்பதிகாரி மறைந்தார். வேறுருவம் எடுத்துப் பிரசன்னமானார், இன்னும் எத்தனை காலத்துக்கு இலங்கை அரசியல் அரங்கத்தில் இந்த மாயாஜாலங்கள் நடக்கப்போகின்றனவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், விய௵
மாசிமீ ௨௦௨ செவ்வாய்க்கிழமை

## சைவப் பெண்கள் கலாசாலையிற் கல்விகற்பிக்கும் முறை

II

சைவப் பெண் பிள்ளைகட்குக் கல்வி கற்பிக்கும் விஷயத்தில், அப்பிள்ளைகளின்பழக்க வழக்க ஒழுக்கம் தொன்மை யென்னு மிவைகளே பிரதானமானவைகளென்ற கொள்கையும், கல்வித் திறமை இரண்டாவதென்ற கொள்கையும், அச் சிறுமிகட்குக் கல்வி பயிற்றும் உபாத்தியாயர் பெற்ருர் வித்தியாசாலையதிபர்களென்னு மிவர்களிடத்தில் ஸ்திரமாக இருத்தல் வேண்டும்; இப்படியான முறையைக் கைக்கொண்டு கல்வி பயிற்றி வரும்போது, இம்முறைகளுக்கு வித்தியா பகுதியார் காலந்தோறும் சுற்று நிருபமாகத் தெரிவிக்கும் ஒழுங்குகளோடும் பாடத் திட்டங்களோடும் ஏதும் முரண்பாடு நேருமாளுல், ஆசிரியர்கள் வித்தியாசாலையதிபரா யுள்ளவர் பெற்ருரெல்லாரும் ஒருங்கு சேர்ந்து, அப்புதிய முறைகள் கொள்கைகள் எங்கள் சைவப் பெண்பிள்ளைகட்கு ஏற்காதன என்று ஏதுக்கள் எடுத்துக்காட்டி வித்தியா பகுதியாருக்குத் தெரிவித்தல் வேண்டும்; அப்பகுதியார் அதனைப் பொருட்படுத்தா தொழிவரேல், வித்தியாபகுதி மந்திரிக்குத்தானும் விஷயத்தை உபாத்தியாயர் முதலானேர் எடுத்துக் காட்டுதல் வேண்டும்; உதாரணமாக, "டிறில்" எனப்படும் தேகாப்பியாச முறையிற் சில இங்குள்ள தமிழ்ச் சிறுமியர் செய்யும்போது பார்ப்பவர்க்கு ஆபாசமானவை யெனச் சொல்லப்படுகின்றன; இயலுமாகிற் சைவப்பெண் பிள்ளைகளா யுள்ளார்க்கு "டிறில்" எனப்படும் தேகாப்பியாச முறையைத் தவிர்த்து, அச்சிறுமிகள் தாங்கள் அப்பொழுதே பயின்றுகொள்ளவேண்டிய சமயற்ருெழில், பன்னவேலை, நெற்குத்துதல், தண்ணீரெடுத்து வருதல் முதலியனவற்றைச் செய்வது நன்ருகும்; அப் பெண்பிள்ளைகளின் பிற்சீவியத்திற்கும் பயன்படுவனவாகும். மேலும் கைத்தையலோ, யந்திரத்தையலோ, இரண்டில் ஒன்றையேனும் ஆசிரியைகள் பிள்ளைகட்குத் திறமை பெறப் பயிற்றிவிடுதல் வேண்டும்.

தமிழ் வித்தியா சாலைகளில் மாத்திரமல்லாமல், ஆங்கில வித்தியாசாலைகளிலும் சைவத் தமிழ் மகளிருக்கு முதுரை முதலாம் நீதிநூல்களும் சமயநூற் கல்வியும் முறைப்படி, குறித்த நூல்களைச் சந்தேக விபரீதமற அறிந்த ஆசிரியர்கள் வாயிலாகப் பயிற்றுவித்தல் ஆவசியகமாகும். அந்த ஆசிரியர்கள் ஆண்களாக, பெண்களாக, போதனையோடு மாத்திரமன்றிச் சாதனையிலும் சைவசமய ஒழுக்கம், சைவத் தமிழ் மக்களுக்குரிய கொள்கைகள் பூண்டவர்களாயிருத்தல் இன்றியமையாததாகும். பிள்ளைகள் எச்சாதியினராக, எத்தேசத்தினராக, எச்சமயத்தினராக எக்காலத்திலும் தங்கள் ஆசிரியர்களையும் பெற்ரேரையும் பின்பற்றியொழுகும் இயல்புடையவராவர்; பெண் பிள்ளைகட்குப் பெண்பாலாசிரியர்கள் மூலமாகக் கல்வியூட்டுவதே சிறந்த முறையாகும். ஆதலினல் இந்த ஆசிரியைகள் தம் ஆசார ஒழுக்கம் முதலியவற்ரேடு மாத்திரம் அமையாது மடம், நாணம் முதலாங் குணம் பூண்டவர்களாய், சமயாநுஷ்டானங்களையும் தொன்மையையும் கைக்கொண்டவர்களாய், நவநாகரீகங்களைப் பின்பற்ருதவர்களாய் இருத்தல் உத்தமோத்தமாகும்; இப்படியல்லாத அந்நியசாதிப் பெண் சமயப் பெண் ஒரு சைவகலாசாலையில் ஆசிரியையாக வந்து கடமை பார்க்க நேர்ந்தால், அந்த ஆசிரியை தான் பயிற்றவேண்டிய துறைக் கல்வியை அநுகூலமுற அப்பிள்ளைகளுக்கு ஊட்டுவதோடு மாத்திரம் நின்றுகொண்டு, மற்றைச் சமய ஒழுக்கம் சாதியொழுக்கமென்னு மிவைகளில், தான் தலையிடுதலின்றிச் சைவசமயக் கொள்கையும் ஆசாரமும் பூண்ட ஏனைய ஆசிரியைகளிடத்தில், அந்தப் பொறுப்புக்களை ஏற்றிவிடல்வேண்டும். சைவத்தமிழ் மகளிரின் கொள்கைகள் ஆசாரங்களோடு முரண்பாடான கருமம் ஏதும் நேருங்காலத்தில், பெற்ருரும், வித்தியாசாலையதிபர்களும் அவ் வித்தியாசாலைகளில் தலையிட்டு ஆசிரியர்களோடு கலந்துபேசி அவர்களுள்ளம் நோவாமல் இதமான முறையில் அவர்களைத் திருந்தி நடக்கச்செய்தல் புத்தியாகும்.

ஆண்பிள்ளைகளுக்குப் பயிற்றப்படுங் கல்வியைக் காட்டிலும் பெண் பிள்ளைகட்குப் பயிற்றப்படுங் கல்வியே விசேஷமாக, சைவசமய ஒழுக்கத்தையும் பழைய தமிழ் மகளிர் கொள்கையையும் நாகரீகத்தையும் ஒட்டியதாக விருக்கவேண்டுமென்பதற்குப் பல நியாயங்களுண்டு; பள்ளிக்கூடத்திற் கல்வி பயில்பவர்களாகிய இச்சிறுமியருங் கன்னியர்களுமே காலகதியில் விவாகஞ் செய்து இல்வாழ்க்கைத் துணைவியராகவும், சிறந்த தாயாராகவும் வருபவர்களாவர்; கொண்டான் குறிப்பறிந் தொழுகுதலாகிய கற்பொழுக்கம் தமிழ் மகளிருக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டுள்ளது; இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை யென்றும், பாழே மடக்கொடியில்லா மனை யென்றும், பல மேலானகொள்கைகள் இல்வாழ்க்கை நடத்தும் தமிழ் மகளுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

# பாகிஸ்தானுக்குச்சாவுமணி

## இந்தியா மந்திரி கூற்று

### ஜின்னு வழிக்கு வருவாரா?

சென்றவாரம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பிரபுக்கள் சபையில், இந்தியா விஷடமான விவாதம் நிகழ்ந்தது. இவ்விவாதத்தை ஆரம்பித்துவைத்தவர்கள் பிரிட்டிஷ் கன்ஸர்வேற்றிங் கட்சியினரான பிற்போக்காளர்; பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிந்திய அறிக்கை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குச் சாவுமணி அடித்ததுபோலாகும். ஆதித்தன் மறையாச் சக்காதிபத்தியத்தைக் கொண்டது இங்கிலாந்து என்ற பெயர் போய், கேவலம் சாதாரண ஓர்இராஜதானியாய் இங்கிலாந்து நிற்கப் போகிறதே என்பதுதான் பிரிட்டிஷ் பிற்போக்குக் கும்பலின் ஆத்திரத்துக்குக் காரணம்.. ஆனல், இதனை வெளியிற் கூருமல், வெள்ளாடு நனைய வேங்கைப்புலி விம்மியழுதவாருய். பிரிட்டிஷ் இராணுவம் இந்தியாவை வீட்டு அகன்றவுடன், அக்கண்டத்திலேயுள்ள மக்கள் ஒருவர் கழுத்தை ஒருவர் நெரித்துக்கொன்று விடுவரே; அப்படிப்பட்ட பாவச் செயலைப் பார்த்துக்கொண்டு உலகத்தின் தர்மகர்த்தாக்களாகவுள்ள பிரிட்டிஷார் வாழாருக்கலாமோ என்று பிரிட்டிஷ பிற்போக்காளர் பிரபுக்கள் சபையிற் சென்றவாரம் ஓலம் இட்டனர்.

* *

### பிரபுக்கள் குட்டிக் கரணம்

பிரபுக்கள் சபையில் உள்ள அங்கத்தவர்களில் பத்தில் ஒரு பங்கினர்தான் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே, இக் கண்டனத் தீர்மானம் அச்சபையில் வெற்றிபெறலாம். அப்படி வெற்றி பெற்ருல், அது தொழிற்கட்சி அரசாங்கத்தின் தீர்மானத்தைப் பாதிக்கமாட்டாது. ஏன் என்ருல் பிரதானமான பொதுமக்கள சபையில் தொழிற்கட்சி யங்கத்தவர்களே பெரும்பான்மையினராக இருந்தமையினுல்; எனினும் பிரபுக்கள்சபை இக்கண்டனத்தை வற்புறுத்தாமல் தவிர்த்துவிட்டார்கள். தீர்மானம் வெற்றிபெற்ருல், இந்தியாவில் நெருக்கடி உண்டாகலாம் என்ற காரணத்தைக்கொண்டு இத்தீர்மானம் தவிர்க்கப்படலாயிற்ரும்.

* *

### பாகிஸ்தான் இல்லை

பிரபுக்கள்சபை விவாதத்துக்குப் பதில் இறுத்த இந்தியா மந்திரி பெதிக்லாரன்ஸ் பிரபு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கையே சரி என்பதை வாதித்தார். இந்தியாவைத் துண்டாடுவது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிந்திய அறிக்கையின் நோக்கமல்லவென்றும், அந்த அறிக்கை மூலம் பாகிஸ்தான் கிடைத்துவிடும் என்று ஜின்னுவும முஸ்லிம்லீக்கும் கருதினுல், அதனையிட்டுத் தாம் ஆச்சரியப்படவேண்டும் என்றும் கூறினுர். இந்தியா மந்திரியின் பட்டவர்த்தனமான இந்தக் கூற்று லீக்கர் காணும் பாகிஸ்தான் கனவைப் பாழ்படுத்தும் என்பதற் கையமில்லை மூன்ரும் பேர்வழியான பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் இனி இருந்து தம்மைத் தட்டிக்கொடுக்கப்போவதில்லை என்பதை ஜின்னுவர்க்கம் இப்போது உணர்ந்து வருகிறது. இனியும் விதண்டவாதம் புரிந்துகொண்டு நின்ருல் பயன்கிடைக்காது என்பதைப் பல லீக் பிரமுகர் உணர்ந்து வருகின்றனர். கூடிய சீக்கிரம் காங்கிரசுடனும் ஏனைய வகுப்புக்களுடனும் ஓர் சமரசத்துக்கு வந்து இந்திய சுதந்திர அரசியலை நிர்மாணிக்க வேண்டும் என்று அவர்கள் ஜின்னுவைத் தூண்டக்கூடும் என்று ஓர் செய்தி கூறுகிறது.

* *

### உப்புவரி ஒழிந்தது

அடுத்தவருட வரவு செலவுத்திட்டத்தை இந்திய இடைக்கால அரசாங்கத்தில் நிதிமந்திரியாயுள்ள லியாகத் அலிகான் சென்ற வெள்ளிக்கிழமை மத்திய சட்டசபையில் எடுத்தாண்டார். உப்புவரியை ஒழிக்க இத்திட்டத்தில் பிரமாணம் வகுக்கப்பட்டிருக்கிறது. உப்புவரியை ஒழிக்க வேண்டும் எனக் காந்தியடிகள் கோரியதும், பண்டிதர் நேரு பதவி ஏற்றதும் இவ்விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கனவாம்.

* *

### சென்னை மந்திரிசபை நெருக்கடி

சென்னை மந்திரிசபையில் ஓர் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இப்போது அங்கே பிரதம மந்திரியாயுள்ள ஸ்ரீ ஜுத் பிரகாசத்தின்மீது தமக்கு நம்பிக்கையில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல சட்டசபை யங்கத்தவர்கள் ஓர் கூட்டம் கூட்டுவித்தனர். இக்கூட்டம் சென்ற வாரத்திறுதியில் சென்னையில் நிகழ்ந்தது. இவ்விஷயமாக விசாரணை புரியச் சென்னைக்கு வந்திருந்த காங்கிரஸ் பொதுக்காரியதரிசி ஸ்ரீ சங்கரராவ்தேவும் கூட்டத்துக்குச் சமுகமளித்தார். கூட்டத்துக்கு ஸ்ரீ பிரகாசம் தலைமைவகித்தார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்தாள்வது காங்கிரஸ்விதிக்கு விரோதமானது என்று ஸ்ரீஜுத் பிரகாசம் கூறி, கூட்டத்தைக் கலைத்துவிட்டார். ஆனல், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவிருந்த காங்கிரஸ் சட்டசபையினர் இன்னேர் கூட்டம் கூடி, அத்தீர்மானத்தை நிறைவேற்றி, ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைச் சட்டசபைக் காங்கிரஸ் தலைவராக நியமித்தனர். சென்னைச் சட்டசபையில் எல்லாமாக 196 காங்கிரஸ் வாதிகள் உளர். இவர்களில் 134 பேர் இந்நம்பிக்கையில்லாத்தீர்மானத்துக் காதரவாக நின்றனர். காங்கிரஸ் அதிகார பீடத்துக்குச் சென்னை நிலைமையை ஸ்ரீதேவ் விளக்கியபின் இவ்விஷயமாக ஓர் முடிவு ஏற்படும்.

* *

### ஹிந்து மகாசபை

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிந்திய அறிக்கையின் விளைவாக ஏற்பட்ட நிலைமையைப்பற்றி ஆலோசித்து ஓர் முடிவு செய்தற்காக, அகில இந்திய ஹிந்து மகாசபையின் காரியசபைக் கூட்டம் புதுடெல்கியில் வருகிற 8ம் 9ம் திகதிகளிற் கூடும்.

* *

### பாஞ்சாலச் சமரசம்

பாஞ்சாலத்தில், மாகாண அரசாங்கத்துக்கு விரோதமாக ஓர்மாத காலத்துக்கு மேலாக முஸ்லிம்லீக்கர் செய்துவந்த கிளர்ச்சி, சமரசமாக முடிவடைந்து விட்டது. அதன் பயனுக இப்போது சிறையாக்கப்பட்டுள்ள லீக்கர் அனைவரும் விடுதலை செய்யப்படுவர். அது நிற்க, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிந்திய அறிக்கை பாஞ்சாலத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதைப்பற்றி ஆலோசிக்க, பாஞ்சாலப் பிரதமர் சேர் கிழிர்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் வேண்டாப் பயிர்கள்

## இந்திய விஞ்ஞானி யின் ஆராய்ச்சி

காசிமா நகரத்திலே ஓர் இந்திய விஞ்ஞானி ஓர் புரட்சிகரமான ஆராய்ச்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறார். தண்ணீர் இல்லாமலே பயிர்களை வளர்க்க முடியுமா என்பதே அந்த ஆராய்ச்சி. அவர் ஜலம் விடாமல் பயிர்களை உண்டாக்கி வளர்க்க முடியும் என்று திடமாக நம்பிக்கை கொண்டு தம் ஆராய்ச்சியில் வெற்றியுமடைந்து வருகிறார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

இவருடைய ஆராய்ச்சி இவர் எதிர் பார்க்கிற அளவுக்கு வெற்றி கொடுக்குமானால், உலகில் இன்று பாலைவனங்களாகக் கிடக்கும் நிலங்கள் யாவும் பசுந் தரைகளாக மிளிர்ந்து, உலகிற் பஞ்சம் என்பதே இல்லாமற் போய் விடும்.

இந்த விஞ்ஞான சாஸ்திரியின் பெயர் டக்ரர் நந்தலால் சர்மா; இவர் காசி ஹிந்து சர்வகலாசாலையில் ஓர் ஆராய்ச்சியாளராக இருந்து வருகிறார். தம்முடைய ஆராய்ச்சி எவ்வளவு தூரம் வெற்றிபடையும் என்பதைப் பரீட்சிக்கவேண்டிச்சகற்கு, ஓர் பாலைவனப் பகுதியை நாடி சிக்கால் என்னும் இடத்துக்கு இப்போது வந்திருக்கிறார்.

டக்ரர் நந்தலால் சர்மாவை ஓர் பத்திரிகை நிருபர் கண்டு இவ்விஷயமாகக் கேட்டபோது "தண்ணீர் இல்லாமற் பயிர்களை வளர்ப்பது சாத்தியம் என்றே நான் கருதுகிறேன்; அப்படி வளரும் பயிர்கள் பயனளிக்கும் விஷயத்தில், தண்ணீர் இறைத்து வளர்ந்த பயிர்களுக்கு எவ்வாற்றானும் குறைந்தனவாயிருக்கமாட்டா என்றே நான் திடமாகக் கருதுகிறேன்" என்று கூறினார்.

இந்த விஞ்ஞானியின் ஆராய்ச்சியில் டக்ரர் சேர். எஸ். ராதாக்கிருஷ்ணனும், மகாத்மாகாந்தியடிகளும் சிரத்தை எடுத்திருக்கின்றனர் என்றும், இந்த முயற்சி வெற்றிபெறுவதில் அவர்கள் ஊக்கங் காட்டுகின்றனர் என்றும் தெரிகிறது. மகாத்மா காந்தி, இவருக்கு அனுப்பியஓர் செய்தியில் "அணுக்குண்டு ஆராய்ச்சிசெய்யும் விஞ்ஞானிகள் இந்தியாவுக்கு வேண்டியது இல்லை. மிகவும் சுலபமான முறையில் மக்களுக்கு வேண்டிய உணவுப் பயிர்களை விளைவிக்கும் விஞ்ஞான ஆராய்ச்சியே எமக்கு வேண்டியதாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## புதிய கல்விச் சட்டம்

### கத்தோலிக்கர் எதிர்ப்பு

கல்வி மந்திரி சமீபத்தில் எடுத்தாளவிருக்கும் கல்விச்சட்டத்திருத்த மசோதாவுக்கு விரோதமாக 1 லட்சம் சனங்களின் ஒப்பம் கொண்ட ஓர் மநு அரசாங்கசபையிற் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இந்த மநுவிற்கு அனேகமாகக் கத்தோலிக்க பிரமுகர்களே கையொப்பம் இட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

அரசாங்கசபை கலைக்கப்படமுன் தம் திருத்த மசோதாவை நிறைவேற்றுவிப்பதில் கல்வி மந்திரி சிரத்தை எடுக்கிறார்.

வருகிற வியாழக்கிழமை இம் மசோதா இரண்டாம்முறையாக அரசாங்கசபையில் விவாதிக்கப்படலாம். ஆனால், இது சட்டபூர்வமாக நிறைவேறுமோ என்பது சந்தேகம்.

# புடைவை இல்லை!

## 2 கோடி யார் குறைவு

இலங்கைக்கு ஆகக் குறைந்த பட்சம் 5 கோடியே 85 லட்சம் யார் துணி தேவைப்படுகின்றது. ஆனால் இப்போதுள்ள நிலையில் இத்தொகையான துணிகள் கிடைக்கா. இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா முதலாம் நாடுகளில் இருந்துதான் இப்போது புடைவைகள் கிடைக்கின்றன. இன்னும் வேறும் நாடுகளிலிருந்து புடைவை கிடைக்காவிட்டால், இந்த ஆண்டிலே 2 கோடி யார் புடைவைக் குறைவு ஏற்படும் என அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

பருத்திப்புடைவை நிலைமைதான் இப்படிக் கேவலத்தில் இருக்கிறது. பட்டு, செயற்கைப்பட்டுத் துணிகள் இப்போது போதிய அளவுக்கு இறக்குமதியாயிருக்கின்றன.

இஸ்லாமியர், சிங்களர் அணியும் சாரங்களில் இளக்கமானவற்றைக் கூப்பன் இன்றி விற்கலாம் என அதிகாரிகள் கூடிய சீக்கிரம் பிரமாணம் விதிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தரகச் சாரங்கள் வியாபாரிகளிடம் விற்பனையாகாமல் இருப்பதே இந்நடைவடிக்கைக்குக் காரணமாம்.

# தமிழ்த் திருநாடு

## மலேயா அரசியல்

### சீனர்—மலாயர் எதிர்ப்பு

மலாயாவுக்கு விதிக்கப்படவிருக்கும் சமஷ்டி அரசியல் முறையைக் கண்டிப்பதற்குச் சீனரும் மலாயரும் கிளர்ச்சிசெய்து வருகிறார்கள். கோலாலம்பூர் சீன வர்த்தக சம்மேளனத்தின் கூட்டம் ஒன்று சென்ற வாரம் கூடி, ஆலோசிக்கப்பட்டிருக்கும் அரசியற்றிட்டத்தைக் கண்டித்து, மலேயாவுக்கு ஏற்ற அரசியலை வகுக்க, ஓர் விசாரணைச் சபையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்து அனுப்பவேண்டும் என்று தீர்மானித்தது.

மலாயருடைய கூட்டம் ஒன்றும் சென்றவாரம் கோலாலம்பூரிற் கூடி, மலாயாவிலிருந்து சிங்கப்பூரைப்பிரிக்கக்கூடாதென்றும், சுல்த்தான்மாருக்கு அரசர்க்குரிய அதிகாரங்கள் யாவும் அளிக்கப்படவேண்டும் என்றும், பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் மத்திய சட்டசபையும் மாகாணச் சட்டசபைகளும் வகுக்கப்படவேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

(செ. சேனாதிராசன்)

எங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு நாடுகளைப்போல கலை, நாகரிகம், சமயம், சிற்பம், ஓவியம் முதலியன இன்று நேற்று உண்டானதல்ல. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டு வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள், அகத்தியர் தொல்காப்பியர் நக்கீரர் முதலிய புலவசிகாமணிகளைக்கொண்டு சமயம் கலை முதலியவற்றை மிகவும் மேம்பாடாக வளர்த்திருக்கிறார்கள். அக்காலத்திலேயே நாகரீகமும் அதி உன்னத நிலையிலிருந்து வளர்ந்திருக்கிறது. அதற்குச் சான்றாக எங்கள் தமிழ்நாட்டுப் புராதன கோயில்களின்கண்ணே விளங்குகின்ற சிற்பம், ஓவியம் முதலியவற்றைக்கொண்டு நன்கு அறியலாம். அதற்கிலக்காக இலங்கையில் வசிக்கின்ற சிங்கள மக்களும் தங்களுடைய நாகரீகம் அநாகரீகமென்று கருதி தமிழ்நாட்டு மக்கள் அணிகின்ற வேஷ்டி, சால்வை, சேலை முதலியவைகளே தங்களுக்கும் வேண்டுமென்று விரும்புகின்றனர். அதுவேண்டி அரசாங்க சபையிற்கூடத் தருக்கம் செய்கின்றனர். இன்னும் சிறிது காலத்தில் சிங்களமக்கள் தங்களுடைய சமயம், பாடை முதலியனவும் பிற்போக்கானதென்று விலக்கி, நம் தமிழ்நாட்டையே பின்பற்றி நடப்பார்களானால் நாம் வியப்படையக் காரணமில்லை. நம்வரகவி சுப்பிரமணிய பாரதியாரும் "தமிழ்த் திரு நாடுதனைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா" என வியந்து பாடியிருக்கிறார்.

# அன்று காட்டிய அகம்பாவம்!

## ஹிட்லர் - ஷஸ்னிக் சம்வாதம்

ஆஸ்திரியதேசப் பிரதம மந்திரியாகவிருந்து, ஹிட்லரின் சர்வாதிகாரக் கொடுமையினால் 7 வருஷ காலம் சிறையில் அடைபட்டுக் கிடந்த டக்ரர் ஷஸ்னிக் என்பவர், ஹிட்லர் வீழ்ச்சிக்குப்பின் விடுதலையடைந்து, இப்போது தம் அநுபவங்களைத்திரட்டி ஓர் நூலாக வெளியிட்டிருக்கிறார். அந்த நூலில், அவர் தாம் ஹிட்லரைச் சந்தித்து, அவருடன் நிகழ்த்திய சம்பாஷணையை அப்படியே படம்பிடித்துக் காட்டியது போலச் சித்திரித்து எழுதுகிறார். டக்ரர் ஷஸ்னிக்குக்கும் ஹிட்லருக்கும் நிகழ்ந்த சம்பாஷணை வருமாறு:

ஷஸ்னிக்: மகாபராக்கிரம சர்வாதிகாரி அவர்களே, இந்த அறை மிகவும் ரம்மியமாக விருக்கிறது இந்த ரம்மியமான அறைக்குள் இருந்து, எத்தனையோ பிரதானமான தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கும் என நம்புகிறேன்.

ஹிட்லர்: ஆம், இந்த அறையில்தான், பல முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் இந்த அறையின் ரம்மியத்தைப்பற்றியோ சுவாத்தியத்தைப்பற்றியோ பேச, இங்கே உம்மைக் கூப்பிடவில்லை. இங்கேபார்; ஆஸ்திரியா விஷயமாக இனியும் இப்படிநடக்கமுடியாது என்பதை நன்கு ஞாபகப்படுத்திக் கொள்ளும். நான் இங்கே பிறந்தது ஓர் சிறந்த நோக்கம் கொண்டு. அந்த நோக்கத்தை நான் நிறைவேற்றவேண்டும் என்பதே ஆண்டவன் சித்தம் என் அதிகாரத்துக்கு விரோதமாக எவன் நடக்கிறானோ, அவன் நசுக்கப்படுவான்.

ஷஸ்னிக்: நாங்கள் எல்லாருடனும் சமாதானமாக வாழவே விரும்புகிறோம், மத்திய ஐரோப்பாவில் எங்கள் [illegible] அவாப்படுகிறோம்.

ஹிட்லர்: கொஞ்சம் இங்கேபார்! நான் கட்டளையிடவேண்டியதுதான். ஒரு கணநேரத்தில் உம்முடைய கோட்டை கொத்தளங்கள் யாவும் அப்படியே தவிடுபொடியாகிவிடும்; என்னை ஒரு கண நேரத்துக்காவது காமதப்படுத்தலாம் என்று நீர் உண்மையில் நினைக்கிறீரா?

ஷஸ்னிக்: அப்படியானால், நாம் தனியே நிற்கமாட்டோம்: எமக்கு மற்றும் நாடுகள் உதவிக்கு வரும்.

ஹிட்லர்: (கலகலவென நகைத்து) யுத்தம்! அந்த யுத்தத்தில் உதவி! என்றெல்லாம் வாயாற் சொல்வது மிகவும் சுலபம். ஆனால் யுத்தம் என்றால் என்ன என்று உமக்கு விளங்குமா? கோடிக்கணக்கான மக்களுக்கு நரக வாழ்க்கையைக் கொடுப்பதே யுத்தம். அப்படியான துன்ப வாழ்க்கையைக் கொடுக்கும் பொறுப்பை நீர் மேற்கொள்ளப்போகிறீரா? இதோபாரும் இந்தச் சாஸனம்! இதில் எவ்விதமாற்றமும் செய்யாமற் கையொப்பம் நீர் போடவேண்டும். இல்லையேல் ஆபத்துத்தான்.

இதன்பின் ஹிட்லர் தம் யுத்தமுஸ்தீப்பைப்பற்றிஷஸ்னிக்கிடம் பின்வருமாறு கூறினாராம்.

"என் புத்திமதியை உலக இராஜதந்திரிகள் கேட்டால், உலகத்தில் சமாதானமும் அமைதியும் கட்டாயம் நிலவும். ஆனால் அவர்கள் கேட்டால்தானே? இன்னோர் உலகயுத்தம் நேருவது எனக்கு விருப்பம் அல்ல.... இன்று ஜெர்மனியில் நாம் யுத்த ஆயத்தங்களை முறைப்படி செய்து வருகிறோம். சகலவித தளபாடங்களிலும் இன்று உலகிலே, நாம்தான் முன்னணியில் நிற்கிறோம். இப்படிப்பட்ட இந்த மகத்தான இராணுவத்தை நான் உபயோகித்து உலகிலே வெற்றிமாலை சூடாவிட்டால் அது முறையாகாது"

## சீனத்துப் பிரதமர்

சீனத்துப் பிரதமர் டக்ரர் ஸி. வீ. ஸூங், தம் பதவியை விட்டு விலகிவிட்டார். குடியரசுத் தலைவரான [illegible] தற்காலிகமாகப் பிர[illegible]பதவியையும் வகித்துவருகிறார்.

# அதிகரிக்கிறது!

## யுத்தகால அலவன்ஸ்

யுத்தகால 'அலவன்ஸ்" என்னும் பஞ்சப்படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் இந்தப் பஞ்சப்படித் தொகை முன்னெருபோதுமில்லாதவாறு அதிகரித்துவிட்டது. இதற்குக் காரணம் தேங்காய், தேயிலை என்பவற்றின் விலைஅதிகரிப்பு என்று சொல்லப்படுகிறது. இப்படியே மாதந்தோறும் பஞ்சப்படி விகிதம் அதிகரித்துக்கொண்டே போனால், அரசாங்கத்துக்கு முன்னர்க் கணித்திருந்ததிலும் பார்க்க மேலதிகமாக 40 லட்சம் ரூபா செலவாகலாம் என்று அதிகாரிகள் அஞ்சுகிறார்கள்.

1944—45-ம் ஆண்டில் பஞ்சப்படிப்பணமாக அரசாங்கம் 3 கோடியே 7 லட்சத்து 8 ஆயிரம் ரூபா செலவழித்தது.

1945—1946 இல் இத் தொகை 3 கோடியே 22 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவாக இருந்தது.

இப்போது நிகழும் வருடத்திற்கு பஞ்சப்படிச் செலவாக 3 கோடியே 24 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவாகும் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள நிலையில், இத்தொகை போதாமல் விடும் என எண்ணப்படுகிறது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதை உடனே நிறுத்தாவிட்டால் இலங்கையரசாங்கத்தின் பொருளாதார நிலை மிகவும் கேவலமாக முடியும் என்று திறைசேரி அதிகாரிகள் கருதுகிறார்கள். வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு: ஒன்று எல்லாக் கட்டுப்பாடுகளையும் ஒழிப்பது; அல்லதுபோனால் அரசாங்கமே சகல பொருள்களையும் இறக்குமதியாக்கி விநியோகிப்பது என்று திறைசேரிப்பகுதியார் அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளனர். இந்த ஆலோசனையைப்பற்றி மந்திரசபையினர் இதுவரை ஓர் முடிவும் செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு காலஞ்சென்ற தில்லையம்பலம் அருணாசலத்தின் ஆஸ்தியின் பேரில்

இல. 1133 Testy

வண்ணார்பண்ணைமேற்கு சின்னத்தம்பி நாகலிங்கம் — தத்துவகாரன்

எதிராக

வண்ணார்பண்ணைமேற்கு 1 நாகலிங்கம் பெண் மங்கையற்கரசி (மரணம்), 2 அருணாசலம் திருக்கேதிஸ்வரநாதன். 3 அருணாசலம் தில்லையம்பலபூபதி, 4 அருணாசலம் சேதுராசா, 5 அருணாசலம் திருச்செல்வம், 6 அருணாசலம் இராசா, 7 அருணாசலம் கைம்பெண் செல்லம்மா, 8 தில்லையம்பலம் கந்தையா, 9 சின்னத்துரைகை.பெ. சிவகெங்கை, 10 நாகலிங்கம் தியாகரத்தினம் (பராயமற்றவர்) இவரின்பராமரிப்புக்காரன் 8-ம் பிரதிவாதி.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1133-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் அசைவுள்ள சாமான்களை 1947-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாசம் 15-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கொட்டடி ரோட்டில் காலம் சென்ற வண்ணார்பண்ணை மேற்கு தில்லையம்பலம் அருணாசலம் வயித்தியரின் 50-ம் நம்பர் வீட்டில் இருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

I

வியாபாரத்திற்காக வைக்கப்பட்டிருந்த சாமான்களின் பெறுமதி ருபா 139-76 சதம்.

கடையிலுள்ள தளபாடங்கள்

1 இரு சிறுகண்ணாடி அலுமாரிகள்
2 ஒரு கண்ணாடி அலுமாரி
3 ஒரு வலை அலுமாரி (net a'myrah)
4 ஒரு கண்ணாடி ருக்கை (rack)
5 ஒரு மருந்துச் சரக்குப் பெட்டி
6 ஒரு புத்தகப்பெட்டி (Book Cases)
7 இரு வாங்கு
8 ஒரு மணிக்கூடு
9 ஒரு காட்சிப்பெட்டி (Show case)
10 ஒரு மேசை
11 ஒரு நாற்காலி
12 ஐந்து பெரிய தராசுகள்
13 ஒரு சிறு தராசு
14 ஒரு சோடி நிறைகள்
15 ஒரு காசுப் பெட்டி
16 மூன்று சிறுபெட்டிகள் (Suit cases)
17 மூன்றுசாடிகள்
18 எட்டுப் படங்கள்
19 ஒரு துவிச்சக்கரம்
20 ஒரு செப்புப்பானை

(H) வீட்டுத் தளபாடங்கள்

1 ஒரு பலகை (side board
2 இரு உடுப்புத் தாங்கிகள்
3 இரு சிறு சுவர்மாட்டிகள்
4 ஒரு சிறு கண்ணாடி
5 ஒரு இஸ்ரூல் (Stool)
6 இரு பழுதான பாட்டுப் பெட்டிகள்
7 ஒரு மேசை
8 ஒரு அலுமாரி
9 ஒரு மணிக்கூடு
10 23 படங்கள்
11 ஒன்பது நாற்காலிகள்
12 ஒரு கவுச்சிக் கட்டில்
13 ஒரு பிள்ளைத் தொட்டில்
14 இருசார்மனைக் கதிரை Easychairs)
15 இரு கட்டில்
16 இரு ஆடுகதிரை
17 இரு பிள்ளைகளின் துவிச்சக்கரம்
18 இருகைபிடிச் செப்பு விளக்கு;
19 ஒரு மேசை லாம்பு
20 குசினித் தளபாடங்கள்
21 ஒரு சோடி வனபோசன பாத்திரம்
22 ஆறு பித்தளைத் தட்டம்
23 இரு சிற்றுண்டிப் பாத்திரம்
24 ஒன்பது செப்புப் பானைகள்
25 ஒரு வட்ட மேசை
26 ஒரு சாப்பாட்டு மேசை
27 ஒருகூட்டம் பன்னீர் வடிக்கும் பாத்திரங்கள்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
Commissioner & Licensed Auctioneer.

தெல்லிப்பழை, 25—2—47.
Mis 332, 4-3-47.

## பங்குனி மாச விசேஷ தினங்கள்

7-ந் திகதி (20-3-47) வியாழன் பிரதோஷ விரதம். தண்டியடிகள் நாயனர் குருபூசை.
8 ,, திகதி (21-3-47) வெள்ளி வல்லை வைத்தியேசுவர சுவாமிகோவில் கொடியேற்றம்.
9 ,, திகதி (22-3-47) சனி அமாவாசை விரதம்.
11 ,, திகதி (24-3-47) திங்கள் இணுவில் சிவகாமியம்மை கோவில் கொடியேற்றம்.
12 ,, திகதி (25-3-47) செவ்வாய் திருக்கோணமலை பத்திரகாளியம்மை கோவில் கொடியேற்றம். அனலைதீவு தெற்கு புளியந்தீவு நாகேச்வர நடராச சுவாமி அபிஷேகம்.
13 ,, (26-3-47) புதன் கார்த்திகைவிரதம். நல்லூர் சட்டநாதசுவாமி கோவில், காரைநகர்ச் சிவன்கோவில், கொழும்பு பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில், கண்டி செல்வவிநாயகர் கோயில், மூளாய் முத்துக்குமாரசுவாமி கோவில் கொடியேற்றம்.
14 ,, திகதி (27-3-47) வியாழன் நேசநாயனர் குருபூசை, இடைக்காடு புவனேஸ்வரியம்மை கோவில் கொடியேற்றம்.
16 ,, திகதி (29-3-47) சனி கணநாதநாயனர் குருபூசை.
18 ,, ,, (31-3-47) திங்கள் முனையடுவார்நாயனர் குருபூசை.
21 ,, ,, (3-4-47) வியாழன் பிரதோஷவிரதம்.
22 ,, ,, (4-4-47) வெள்ளி பங்குனி உத்தரம்.
23 ,, ,, (5-4-47) சனி பூரணை விரதம்.
25 ,, ,, (7-4-47) திங்கள் காரைக்காலம்மையார் குருபூசை.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

புதன் மார்ச் 5

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 தென்காசி பி கே ராசம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வானொலி வாத்யகோஷ்டி பாட்டு 8.30 எம் வி சந்தானம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம வி சந்தானம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 எம் வி சந்தானம் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை5: தென்காசி பி ராசம்மா பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் தேசியாகராசபாகவதர் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராசில் உள்ளபடி 8 குரல்வகை இசைத்தட்டு 8-15 மதராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கோட்டு வாத்யம் வீணை 9.30 லண்டனி விருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கிலப் பேச்சு 10-30 முடிவு.

வியாழன் மார்ச் 6

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கல்லிடைக்குறிச்சி எஸ் லட்சுமி நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் இசைத்தட்டு 8-30 லீலா சேஷசாயி பாட்டு 9 முடிவு.

1 சதுர்ப 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கல்லிடைக்குறிச்சி எஸ் லட்சுமி நாராயணன் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2.05 கல்லிடைக்குறிச்சி எஸ் லட்சுமி நாராயணன் பாட்டு 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: லால்குடி நீலமேகம் பிள்ளையவின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 புதிய வெளியீடுகள் 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில்செய்திகள் 7-45 டி ஏ நாகசாமி பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 காமன் பண்டிகை நாடகம் 9.30 லண்டனி விருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 லால்குடி ஆர் நீலமேகம் பிள்ளையவின் 10.30 முடிவு.

செவ்வாய் மார்ச் 7

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர் ராசம் சாளவகி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 என் ஸ்ரீநிவாச ராகவாச்சாரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் ராசம் சரஸ்வதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஆர் ராஜம் சரஸ்வதி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 வி கமலா பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 பி எல் சி எம் சிவசுப்பிரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 தீண்டாமை நிந்தி உரவு 8 வி கமலா பாட்டு 8.30 பி எல் ஜி எம் சிவசுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை 9.30 லண்டனி விருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 விபோ ஸிதர் அ இ ரே சித் சான்மன 10 நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

## விளம்பரம்

சுழிபுரம் சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை ஆகிய நான் அறிவிக்கிறதாவது நான் குடியிருக்கும் வளவு சுழிபுரமிறை தேவ தோட்டமும் கூடல்வளவும் பரப்பு நில. இ. ஆறும்வீடும் கிணறும் அதைச சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு தி. வள்ளியம்மையி னுதனமும், வடக்கு தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுடைய ஆதனம், மேற்கு சரவணமுத்துவி னுரிமைக்காரரின் ஆதனம், தெற்கு ஒழுங்கை. இதடங்கலும எமது தாயார் நம்பிக்கைக்கு எனது தமையனர் சிற்றம்பலம் கிருஷ்ணருக்கு எழுதப்பட்டு என்னல் ஆட்சிப்பண்ணி வருவதும் எமது சொந்தமானது மாகிய நிலமும்; ரூபா. 4000 செலவு செய்து எனக்காக வீடுகட்டியுள்ளேன். இவ்வாதனத்தை யாரும் வாங்கக்கூடாது என்பதை அறியத் தருகிறேன்.

சி, கணபதிப்பிள்ளை,
சுழிபுரம், 24-2-47.
Mis 336, 4—3—47.

## "மணமுடித்தால் இருவரை முடிப்பேன் இல்லையேற் குமராயிருப்பேன்"

வட இந்தியாவில் காரய்சியைச் சேர்ந்த சக்கூர் என்னுமூரில், ஒரு தகப்பன் கன்னிகையாகிய தன் மகளுக்கு விவாகம் பேசி ஒழுங்குசெய்துகொண்டு, மகளுடைய சம்மதத்தைவினவியபோது அவள் தகப்பனை நோக்கி "அப்பா எனக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டுமானல், இரண்டுமாப் பிள்ளைகளை ஒழுங்குபண்ணி அவர்களுக்கு என்னைக் கல்யாணஞ்செய்துகொடும்; அது உமக்கு விருப்பமில்லாவிட்டால் நான் கல்யாணமின்றி இப்படியே எப்போதுங் குமராயிருந்து காலங் கழிப்பேன்" என்றுளாம்; தகப்பன் ஆச்சரியப்பட்டு "என் மகளே, இப்படிச் சொல்லுகிறுய்" எனக் கேட்டபோது, இப்பொழுது உங்களுக்கு இரண்டு மனைவியர் இருக்கிறுர்களல்லவா? இதுபோலவே நானும் இரண்டு கணவரை வைத்துக்கொள்ளலாந்தானே" என்று தகப்பனுக்குப் பதில் சொன்னுளாம்.

## எல்லாம் "தேவி"கள்

கொழும்புக்கும் காரச்சிக்குமிடையே ஆகாசவிமானப் போக்குவரத்து நடத்த இலங்கை யரசாங்கம் ஆலோசித்து மூன்று ஆகாச விமானங்களை இந்தியாவில் இருந்து வாங்க நிச்சயித்திருக்கிறது அந்த விமானங்களுக்கு முறையே சீதாதேவி, விகாரமகாதேவி, சுநேத்திராதேவி என்று பெயர் வைக்கப்படுமாம். இந்த விமானப் போக்குவரத்தால் அரசாங்கத்துக்குப் பயன் விளையுமோ என்பது வேறு விஷயம்.

## நன்கொடை

நயினர்தீவைஜெனனபூமியாகக்கொண்டவரும், ஊர்காவற்றுறையில் ஸ்ரீமான் பி. ம. தம்பியையா அவர்களின் கடையில் கணக்கப்பிள்ளையா யிருந்து கடமையாற்றியவரும் 1935-ம் ஆண்டு மாசி மீ காலஞ்சென்றவருமாகியதிரு. இளையதம்பி வேலாயுதபிள்ளை அவர்களின் பன்னிரண்டாம் வருடம் 1-3-47 சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சி யந்திரசாலையும் புத்தக சாலையும் வைத்து நடத்திவரும் மேற்படியாரின் புத்திரர்களால் அன்னரின் ஞாபகார்த்தமாகச் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபா 2 பெற்றும்.

மனேஜர்.

## பெயர் மாற்றம்

வல்வெட்டித்துறை, வல்வெட்டி வாசியாகிய முருகர் முத்தையன் என இதுகாறும் அழைக்கப்பட்டு வந்த யான், 1946ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12-ந்திகதி முடித்த சத்தியக் கடதாசிப்படி முருகர் சின்னையா எனப் பெயர்மாற்றி இருக்கிறேன் என்றும், அவ்வாறே சகல சாதனங்களிலும் இனிக்கையொப்பம்இடுவேன் என்றும் இத்தால் அறிவிக்கிறேன்.

வல்வெட்டி
வல்வெட்டித்துறை
1—3—47

இப்படிக்கு
மு. சின்னையா

Mis 4—7-3-47

## பிரான்சில் இந்திய ஸ்தானிகர்

பிரான்சில், இந்திய அரசாங்கத்தின் முதல் ஸ்தானிகராக திவான் சாமன்லால் நியமிக்கப்பட்டிருக்கிறுர் என்று யூனைற்றெட் பிறெஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. இது உத்தியோக பூர்வமாக இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. திவான் சாமன்லால், இந்திய மத்திய சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவராயுள்ளவர். இவ்விஷயமாக ஓர் அறிக்கை சீக்கிரம் வெளியாகலாம்.

## காணிவிற்பனவு

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்
வழ. இல. D. 154.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் கட்டளைப்படி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி ரோட்டில், புகையிரதஸ்தானம், நீதிஸ்தலங்கள், பெரியகடை என்பவற்றுக்குச் சமீபமாகவுள்ள, பின்விபரிக்கப்படும் விஸ்தாரமான சகல வசதிகளோடும் கூடியவீடும் காணியும், விற்பனைக் கிருக்கிறது. இக்காணியை வாங்க விரும்புவோர், இவ் விளம்பரப் பிரசுரத் திகதியி லிருந்து மூன்று வாரத்துக் கிடையில் தாம் கொடுக்க விரும்பும் விலைவிபரத்தை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கிடுத்தாருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

காணிவிபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "பானன்காடு" நிலப்பரப்பு (4) நாலும் கல்வீடும் தலைவாசலும் கிணறும் வெளிவீடுகளும் மதிலும் அடுக்களையும் பனை செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கிருஷ்ணன்செட்டி கோபாலச் செட்டியின் ஆதனம், வடக்கு கந்தையா ஆறுமுகத்தி னுதனமும், மேற்கு றயில்ரோட்டு, தெற்கு வேலுப்பிள்ளை நாகரத்தினம் பெண் கண்மணிக்கும் வயித்திலிங்கம் தியாகராசா பெண் சின்னம்மாவுக்கும் உரிய ஆதனம் இதில் கிணற்றில் வடக்குக் காணிக்குரிய மூன்றிலொரு பங்கு நீக்கி இவ்வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலும்.

Mis 335, 4—7-3-47.

## நிரீச்சுரவாதிகளுக்கு இடமில்லை

சிந்துமாகாணச் சர்வகலாசாலையில் அல்லது அக்கலாசாலைக்குச் சேர்ந்த கல்லூரிகளில் நிரீச்சுர வாதிகளை ஆசிரியர்களாக அமர்த்த வொண்ணுது என்ற ஓர் சட்டத்தை சிந்துச் சட்டசபை சென்றவாரம் நிறைவேற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## துவணவர் வரு படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

கந்து தித்திடு வி னர மடங்கலுங் கடலின்
முந்து தித்திடு மாலமும் வடவையு முரண
நந்து தித்தன களமணிப் பாவைநற் றவத்தால்
வந்து தித்தனன் வீர தீரப்பெயர் வலியோன்.

சற்றூணிற் ரேன்றிய வலிய நரசிங்கமூர்த்தியையும், பாற்கடலிற் பிறந்த ஆலகாலமெனப்படும் நஞ்சையும், வடவாமுகாக்கினியையும் கிகர்ப்ப சங்கு தோன்றினுற்போன்ற கழுக்கையுடைய இந்திரநீலவல்லி யென்னுஞ் சத்தியின் நல்ல தவத்தின் பேருக, (அச் சத்தியிடத்து) வலிமையுடைய வீரதீரர் என்னும் பெயரையுடைய வீரர் வந்து தோன்றினு ரென்பது கருத்து.

நரமடங்கலும் ஆலமும் வடவையும் வீரதீருடைய பேராற்றலுக்கும் தப்பாது பகைவரைக் கொல்லுங் திறமைக்கும் யுத்தஞ் செய்யும்போது கொள்ளும் தறுகண்மைக்கும் முறையே ஒப்பாகக் கூறப்பட்டனவென்க கந்துதித்தன - சங்கு தோன்றி விளங்கி)னுற்போன்ற (சங்கினையொத்த); மணிப்பாவை - இந்திரநீலவல்லியென்னுஞ் சத்தி. [மணி - இந்திரநீலம்] (33)

இந்த வீரரோன் பதின்மரு மீசன தருளாற்
றந்த மன்னையர் நிறங்கோடே போலந்துகில் தாங்கி
வந்து பற்பகல் வளர்தரு முறுப்பொடு மடவார்
உந்தி யின்வழி நான்முகத் தண்ணல்போ லுதித்தார்.

இவ்வொன்பது வீரர்களும் கைலாசபதியினது திருவருளினுலே. தத்தம் தாயருடைய நிறத்தையே தமக்கு முடையவராய், பீதாம்பரத்தை உடுத்தியவராய், பலநாள் வளர்ச்சி முற்றிய வடிவத்துடன், பிரமதேவர் திருமாலின் நாபியிற்ருேன்றிய தன்மைபோல், தத்தம் தாயரின் நாபிவாயிலாக வந்து பிறந்தனரென்பது கருத்து.

தந்தமன்னையர் நிறங் கொடே யென்றதனுல், மாணிக்கவல்லியிடத்துத் தோன்றிய வீரவாகுதேவர் மாணிக்கரத்தினத்தின் நிறமாகவும் ஏனைய எண்மரும் தத்தம்தாயரின் நிறமமைந்தவராயும் தோன்றினரெனக்கொள்க. உமாதேவியார் இட்ட சாபங் காரணமாக இவர்கள் தம் தாயர் வயிற்றிற்ருனே யோகநிலை பூண்டவராய்ப் பிறத்தலின்றிப் பலநாளிருந்து வளர்ந்தாராதலின் "பற்பகல் வளர்தரும் உறுப்பொடும்......" என்ருர்; பற்பகல் வளர்தரும் உறுப்பு - பூரண வளர்ச்சியோடு கூடிய அவயவங்கள்.

[நம்மவர்களைப்போல் யோனிவாய்ப்பட்டுப் பிறத்தலின்றி அந்நவசத்திகளின் உந்திவழியாக, பிரசவ வேதனையின்றிப் பிறந்தனரென்க.] (34)

உதிதருமத் திறல்வீர ரரியணைமே லம்மையுட னுறைந்த நாதன்
பதமலர்கள் பணிந்தெழலு மவர்க்கண்டு பார்ப்பதியைப் பரிவா னேக்கி
மதியுடையர் திறலுடையர் மானவருங் கலத்தினர்நம் மைந்த ரின்னேர்
புதயரலா நந்திதனிக் கணத்தவரென் ருன்சுருதிப் பொருளாய் நின்ருன்.

ஞானத்தோடு கூடியவர்களாகிய அந்த வல்லமை பொருந்திய வீரர்கள் சிம்மாசனத்தின் மீது உலக மாதாவாகிய உமாதேவியாருடன் எழுந்தருளிய கைலாசபதியின் (அன்றலர்ந்த) செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்து விநயமாக நிற்றலும், பெருமான் அவர்களைப் பார்த்தருளி, பருவதவர்த்தனியாரை அருளொடும் நோக்கி, இப்புதல்வர்கள் விவேகமுடையவர்கள்; பேராற்றல் பொருந்தியவர்கள்; அபிமானமாகிய அரிய ஆபரணங்களைப் பூண்டுள்ளவர்கள்; எம் புதல்வர்களா யுள்ளோர்கள் ஆனதால் இவர்கள் உனக்கு அந்நியரல்லர், நந்திகணத்தவராயுள்ளவர்கள் என்று கூறியருளினர், வேதாகமங்களின் தத்துவப் பொருளாய் விளங்கும் பரமசிவன் என்பது கருத்து.

இறைவரும் இறைவியும் ஒருங்கு எழுந்தருளியிருக்குஞ் சமயத்தில் அவ்விருவரையும் இந்நவவீரர் பணிந்தனரென்பதை உணர்த்தும்பொருட்டே, "அரியணைமே லம்மையுட னுறைந்த நாதன் பதமலர்கள் பணிந்து" என்ருர்; அவர்க்கண்டு — அவர்கள் அங்ஙனம் தம்மைப் பணிந்தெழுந்து ஒதுங்கி விநயமாக நிற்றலைக் கண்டருளி; அம்மையார் தம்மைப் புறக்கணித்து இறைவர் தாமே இப்புதல்வர்களைத் தோற்றுவித்தாரென்பது காரணமாக, அவ்வம்மையாரின் திருவுளத்திலெழுந்த பிணக்கையொழிக்கும் வண்ணம் பரமபதி அம்மையைக் கருணையொடு நோக்கினு ரென்பார் "பார்ப்பதியைப் பரிவானேக்கி" என்ருர். இவர்கள் தம் தாயர் வயிற்றிலிருந்து இப்பொழுதுதான் பிறந்து, இங்கு எம்முன்னர் வந்து எம்மைப் பணிந்து நிற்பதனுல், சாமானியமான குழந்தைகட்குரிய விரகின்மை வலியின்மை மானமறியாமை யென்னுமியல்பான தோஷங்களுண்டென்றெண்ணற்க; இவர்கள் பேரறிவு பேராற்றல் பேரபிமானம் முதலிய பூண்டுள்ளவர்கள்; அப்படிப் பூண்டிருத்தற்குக் காரணம், எம்மருளாற் பிறந்த புதல்வராதலினுலாம்; இனி இவர்கள் இப்பொழுதுதான் நவசத்தியரிடத்துச் சனித்த சிறுவரோவெனின், அற்றன்று; இவர்கள் நம் நந்திகணத்தவராவர். ஓர் ஏதுவால் இங்ஙனம் வந்து இப்பொழுது தோன்றியுள்ளார் என்னுமிவைகளையெல்லாம் கைலாசபதி உலக மாதாவாகிய ஈசுவரிக்குச் சொல்லி எங்கள் ஈசுவரியையும் அப்பிள்ளைகள்மீது அபிமானம் வைக்கச்செய்தாரென்பது இத்திருவிருத்தத்தின் நுண்பொருளென்க; என்னை? பரமபதியும் உலகத்தவர்கள்போல, தம் தேவி கொண்ட பிணக்கைத் தீர்ப்பதற்கு இச்சிறுவர் விஷயமாக இத்துணைச் சமாதானங்களையெல்லாம் எடுத்துக் கூறுகின்ருரேயெனின், அற்றன்று இவைசூரபன்மன் முதலிய அசுரர்களால் தேவர்கட்கு நேர்ந்த பேரிடரைத் தீர்த்தற்குப் பெருமான் செய்துள்ள அருள் விளையாட்டுக்களின்பாற்பட்டனவாம்; இந்த உண் [illegible]

ஆசாரிய சுவாமிகள் அருமறைக்கும் அரிபிரமர்க்கும் ஏனை அமரர்க்கும் முனிவர்க்கும் எட்டாப் பரமன் வேதாகமங்களின் தத்துவப் பொருளாய் நின்றவனென்னும் பொருள்கள் போதர "சுருதிப் பொருளாய் நின்ருன்" என்ற வாய்மையாற் கூறினுரென்க.

[உதிதரும் - அறிவைத் தரும்; இங்ஙனமன்றி முதனிலைத் தொழிற்பெயராய் உதித்தலென்பது உதியென நின்றதெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும்.] (35)

# பாஞ்சாலத்திற் குழப்பம்

## லீக்கர் பதவி ஏற்றனர்

பாஞ்சாலத்தில் இதுவரை, யூனியனிஸ்ற் கட்சியும், காங்கிரசும், சீக்கியரும் ஒன்றுசேர்ந்து ஆட்சிபுரிந்தனர். இது லீக்கருக்குப் பெரும்வேதனையாகவிருந்தது. பாஞ்சாலம் இல்லாவிட்டால்தம் பாகிஸ்தானுற்பெரும் பயன் கிடைக்காது என்றிருந்த ஜின்ன அங்கே பலவித கலவரங்களையும் உண்டாக்கினர். அக்கலவரங்கள் சாதாரணமாகத் தீர்க்கப்பட்டு விட்டபோதிலும், இதுகாறும் ஆட்சிசெலுத்திய மந்திரசபை பதவியை விட்டு விலகிவிட்டது. தேசாதிபதி முஸ்லீம் லீக்கைக் கொண்ட ஓர் மந்திரசபையை அங்கே நிறுவிவிட்டார். அம்மந்திரசபைக்குத் தலைவராக,மாம்டோற் கான் இப்சிக் கருதீன் உளர். சீக்கியரும் காங்கிரஸ் வாதிகளும் தம்மந்திரசபையுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டனர்.

பாஞ்சாலத்திலே—தமது தாயகமாயுள்ள பாஞ்சாலத்திலே—சீக்கியராகிய தம்மை முஸ்லிம் லீக்கர் அடக்கி ஒடுக்கி அதன்மூலம் பாகிஸ்தான் பெறவிருப்பதைத் தாம் ஒருபோதும் விடமுடியாதென்றும், இதன்பொருட்டுச் சீக்கியர் தம் இரத்தத்தைச் சிந்தப் பின்வாங்கமாட்டார்களென்றும், சீக்கியத் தலைவரான மாஸ்ரர் தாராசிங், ஓர் அறிக்கை விடுத்திருக்கிருர். அடுத்தவாரம் பாஞ்சாலம் எங்கணும் பாகிஸ்தான் எதிர்ப்புத்தினம் மும்முரமாக நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த எதிர்ப்புத் தினத்தில், சீக்கியரும் ஹிந்துக்களும் செய்யும் ஆர்ப்பாட்டங்களில் தலையிடாது இருக்கவேண்டும் என்று முஸ்லிம் லீக்கர் முஸ்லிம்களுக்கு அறிவிக்கிருர்கள். சுருங்கச் சொல்லுங்கால், பாஞ்சாலத்தில் பெருங் குழப்பங்கள் ஏற்படுதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன,

### மதுபானம் செய்வது குற்றம்

21வயதுக்குட்பட்டவர்கள் மதுபானம் செய்தாலஅவர்கள்மீது கிறிமினற் குற்றம் பாரித்து வழக்குத் தொடரப்படுவதற்கு விர்துமாநாண அரசாங்கம் நிச்சயித்திருக்கிறது,

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

# பாகிஸ்தானுக்குச் சாவுமணி

7ம் பக்கத் தொடர்ச்சி

ஹையத்கான், கூடிய சீக்கிரம் முஸ்லீம்கள், சீக்கியர், ஹிந்துக்களைக் கொண்ட ஓர் மகாநாட்டைக் கூட்டுவர் என்று யூகிக்கப்படுகிறது.

* *

### மேனன்—மௌன்பேற்றன் சந்திப்பு

பண்டிதர் நேருவின் ஐரோப்பாப் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீ ஜுத் கிருஷ்ணமேனன், சென்ற வியாழக்கிழமை, இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மவுன்ற் பேற்றன் பிரபுவைச் சந்தித்து ஒரு மணித்தியாலமாகச் சம்பாஷித்தார். அவர்கள் இருவரும் என்ன விஷயமாகச் சம்பாஷித்தனர் என்பது தெரியவில்லை. மவுன்ற்பேற்றன்பிரபு தமது ஓர் பழைய நண்பரானபடியால், அவரைச் சந்தித்து நட்பைப் புதுப்பித்துக் கொண்டதாக ஸ்ரீஜுத் மேனன் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். ஆனுல் இந்திய அரசியல் விஷயமாகவே சம்பாஷணை நடைபெற்றிருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களிடையே யூகிக்கப்படுகிறது,

## அடுத்த அரிசிக் கூப்பன் புத்தகங்கள்

இப்போது அநுட்டானத்திலிருக்கும் அரிசிக்கூப்பன் புத்தகங்கள் வருகிற ஜூன் மாதத்துடன் முடிவடைந்துவிடும். எனவே புதிய கூப்பன் புத்தகங்களை விநியோகிக்கும் முயற்சியைச் செய்ய அரசாங்கம் இப்போது ஆரம்பித்திருக்கிறது.

வருகிற மார்ச்மாதம் 27-ம் திகதி இதற்கான ஆட்கணக்கு எடுக்கப்படும்,

ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு நிறமான கூப்பன் புத்தகங்கள் கொடுக்க இப்போது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது,

## இந்திய - அமெரிக்க உறவு

அமெரிக்காவில் இந்திய இராஜரீகத்துத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜனுப் அஸ்ப் அலி சென்ற வெள்ளிக்கிழமை வாஷிங்டன் நகரத்தில் ஜனுதிபதி ட்ரூமனைச் சந்தித்துத் தம்முடைய அதிகாரப் பத்திரங்களைச் சமர்ப்பித்தர். அப்போது மிஸ்ரர் ட்ரூமன், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தில் அமெரிக்கா பூரணமான ஒத்துழைப்பை அளிக்கும் என்று கூறினுர்.

### மவுன்ற் பேற்றன்பிரபு

இந்திய இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள மவுன்ற் பேற்றன் பிரபு மார்ச் மாசம் 10-ந் திகதி லண்டனைவிட்டுப் புறப்பட்டு டெல்கிக்கு வருவார் என்றும் 15-ந் திகதி தம்கடமையை ஏற்பார் என்றும் ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் படும்பாடு

னம் முதலாய பல்வகைக் கலைகள் வளம்மல்கி ஓங்கியிருந்தன. பண்டைத் தமிழ் நூல்கள் பல, கடல்கோள்களாலும் ஆடிப் பெருக்காலும் செல்லுக்கிரையாயும் அழிந்தொழிந்தன. எஞ்சியிருப்பனவாய இலககிய நூல்களைப் புரட்டிப் பார்க்குமிடத்துத் தமிழரின் கலைநுட்பமும் பண்டைப் பெருமையும் தெட்டத்தெளிவாகின்றன. பூமிசாஸ்திர ஆராய்ச்சிகூடத் தமிழருக்குப் புதிய தொன்றன்று. இவ்வுலகமானது சூரியனில் இருந்து பிரிந்து வந்ததென்றும் ஆதியில் அஃது அனற்பிழம்பாயிருந்து பின்னர் கல்லுருவெய்தி அதன்மேல் மண்ணாகி வந்ததென்றும் பூமி சாஸ்திரிகள் கூறுவர். இவ்வுண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே நந்தமிழ்மக்கள் அறிந்திருந்தன ரென்பதற்குச் சான்றுண்டு.

"கற்றோன்றி மண் தோன்றாக்
காலத்து
முற்றோன்றி மூத்த குடி"

எனவருஞ் செய்யுளிலிருந்து இது தெளிவாகிறது. நேரத்தை யறியுங் கருவிகூட அந்நாளில் இருந்தது. கடிகாரம் என்ற சொல்லை நோக்கினால் அக்காலத்து நேரத்தை யறியுங் கருவியை மாலையில் அமைத்து அணிந்திருந்தனர் என்னும் உண்மை புலனாகிறது. வெப்பமும், தட்பமும் நீங்காது காக்கும் பாத்திரமும் அந்நாளில் இருந்ததாகச் செய்யுள்கள் தெரிவிக்கின்றன. இன்று தமிழ் மக்கள் தம் பண்டைப் பெருமைகளை இழந்துளரேனும் எவ்விதக் கலையையும் எழுதிக் காட்டற்கு வாய்ப்பான சொற்பெரும் பரவை வாய்ந்தது எங்கள் தமிழ்மொழி. ஆங்கிலத்துறை போய தமிழ் மக்கள் இன்று தமிழ்மொழியில் மேனிலை வாயாக் கலைகளைத் தமிழில் ஆக்கித்தரல் வேண்டும். அவர்கள் இன்னனவாய ஆக்கவேலைகளில் ஈடுபடாது தமிழ் மக்களையும் தமிழையும் குறை கூறுவதில் ஈடுபடுவது வருந்தத்தக்கது.

(வரும்)

# இராமகிருஷ்ண ஜெயந்தி

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஷை ஜயந்தி சென்ற 23—2—47 ஞாயிற்றுக்கிழமை அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை திரு. C. K. சுந்தரசாஸ்திரி B. A. B. T. அவர்கள் சுவாமிஜியின் போதனைகள் சிலவற்றை எடுத்துக் கூறினார். பின்னர் இராமக்கிருஷ்ணர் ஆலயத்தில் ஒரு விசேஷ பூசையொன்று நடைபெற்றது. பிற்பகல் மாணவர்கள் சார்பில் ஓர் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜீ அவர்கள் தலைமை வகித்தார்கள். அவ்வமயம் ஆசிரியர்கள் திரு I. M. மத்தியூ M. A. (Cantab) திரு K. கணபதிப்பிள்ளை F. R. G. S. ஸ்ரீமதி C. சுந்தரம் B. A; B. Sc, ஆகியோர் பரம ஹம்ஸரது சிவிய சரிதையை எடுத்தோதினார்கள். —கடித.

●

ஷை ஜயந்தி நாவலப்பிட்டி இந்து வாலிபசங்க ஆரவின்கீழ் 23-2-47 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் கொண்டாடப்பட்டது. அத்தருணம் பிரமஸ்ரீ S. N. சர்மா அவர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைப்பற்றி இனியதோர் சங்கீத உபந்நியாசஞ் செய்தார்கள். பிரார்த்தனை பூசை இவற்றுடன் ஜயந்தி இனிது நிறைவேறியது. —கடித


## விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் சுண்ணாகப்பகுதியிலிருக்கும் பெரியதம்பிரான் குளத்திலிருந்து ஐயனார்கோவிலடி வரை இருக்கும் நீர்வாய்க்காலிலுள்ள திருத்தங்களைச் செய்வதற்கு, வடமாகாணப் பகுதி ஏஜண்டு அவர்கள் 1947-ம் ஆண்டு பங்குனி மாதம் 18ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணியளவில் குறித்த (டெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்களை ரூபா 50 கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்படவேண்டும். மறு விபரங்களை அவரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

G. 152—4.3-47

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப்பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப்பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

## கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு ஆசிரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீக்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீக்கும், கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம், சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)

விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை

## NEW IRON SAFES FOR SALE
## புதிய இரும்புப் பெட்டிகள்
### விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13.12.46—12-3.47

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Mis 246 20-11-46—20-11-47 (தி)

## இந்துசாதனம்
### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, March, 4, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org